(எட்டாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 13.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2020 பெப்ரவரி 19, புதன்கிழமை பி.ப. 1.00 மணிக்கு

## சமுகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ தினேஷ் குணவர்தன,** வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** தகவல் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மற்றும் உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர்

**கௌரவ எஸ். எம். சந்திரசேன,** சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் வளங்கள் அமைச்சர் மற்றும் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ ஜனக பண்டார தென்னகோன்,** பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ ஆறுமுகன் தொண்டமான்,** சமுதாய வலுவூட்டல்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் ஏற்றுமதிக் கமத்தொழில் அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு மேம்பாடு அமைச்சர் மற்றும் சுற்றுலா மற்றும் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ சமல் ராஜபக்ஷ,** மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் யாப்பா அபேவர்தன,** தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** அரச முகாமைத்துவ மற்றும் கணக்கீட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார,** நீர்வழங்கல் வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அருந்திக்க பர்னாந்து,** சுற்றுலா மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,** சர்வதேச ஒத்துழைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** சமூகப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** மகளீர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா,** உள்ளக வர்த்தக மற்றும் பாவனையாளர் நலனோம்புகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரொசான் ரணசிங்க,** மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிமல் லான்சா,** சமுதாய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ காமினி லொக்குகே,** நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** ஏற்றுமதிக் கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விதுற விக்கிரமநாயக்க,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** தேயிலைக் கைத்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜயந்த சமரவீர,** சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலங்க சுமதிபால,** தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,** வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ வஜிர அபேவர்தன**

**கௌரவ அசோக் அபேசிங்க**

**கௌரவ சிசிர குமார அபேசேகர**

**கௌரவ ஜோன் அமரதுங்க**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே**

**கௌரவ வசந்த அலுவிஹாரே**

**கௌரவ (கலாநிதி) சீ.மு. முகம்மட் இஸ்மாயில்**

**கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ அகில விராஜ் காரியவசம்**

**கௌரவ பைஸால் காசிம்**

**கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே**

**கௌரவ மனோ கணேசன்**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) அனோமா கமகே**

**கௌரவ தயா கமகே**

**கௌரவ பியசேன கமகே**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர**

**கௌரவ எட்வட் குணசேகர**

**கௌரவ மொஹான் லால் கிரேரு**

**கௌரவ டி.வீ. சானக**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ மலித் ஜயதிலக**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ நலின் பண்டார ஜயமஹ**

**கௌரவ லக்கி ஜயவர்தன**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ க. துரைரெட்ணசிங்கம்**

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா**

**கௌரவ பழனி திகாம்பரம்**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ வீரகுமார திசாநாயக்க**

**கௌரவ முஹம்மது நசீர்**

**கௌரவ எஸ். பீ. நாவின்ன**

**கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ புத்திக பத்திறண**

**கௌரவ கருணாரத்ன பரணவிதான**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா**

**கௌரவ நிரோஷன் பெரேரா**

**கௌரவ அஜித் பி. பெரேரா**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ ஹரின் பர்னாந்து**

**கௌரவ ஏ. டி. பிரேமதாச**

**கௌரவ சஜித் பிரேமதாஸ,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ எஸ். பிரேமரத்ன**

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார**

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார**

**கௌரவ பாலித ரங்கே பண்டார**

**கௌரவ இந்திக பண்டாரநாயக்க**

**கௌரவ றிஸாட் பதியுதீன்**

**கௌரவ தாராநாத் பஸ்நாயக்க**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா**

**கௌரவ கே. காதர் மஸ்தான்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்**

**கௌரவ அப்துல்லா மஹரூப்**

**கௌரவ அஜித் மான்னப்பெரும**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண**

**கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்**

**கௌரவ அர்ஜுன ரணதுங்க**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ சமன் ரத்னபிரிய**

**கௌரவ சாகல ரத்நாயக்க**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ ஹர்ஷண ராஜகருணா**

**கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ**

**கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்**

**கௌரவ அங்கஜன் இராமநாதன்**

**கௌரவ ரன்ஜன் ராமநாயக்க**

**கௌரவ வருண லியனகே**

**கௌரவ இரான் விக்கிரமரத்ன**

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க**

**கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க**

**கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம

கௌரவ துலீப் விஜேசேகர

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ ச. வியாழேந்திரன்

கௌரவ சந்திம வீரக்கொடி

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ குமார வெல்கம

கௌரவ சி. சிறீதரன்

கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்

கௌரவ மலிக் சமரவிக்ரம

கௌரவ மங்கள சமரவீர

கௌரவ ரவீந்திர சமரவீர

கௌரவ சந்தித் சமரசிங்க

கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்

கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்

கௌரவ (டாக்டர்) சி. சிவமோகன்

கௌரவ முத்து சிவலிங்கம்

கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்

கௌரவ வடிவேல் சுரேஷ்

கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன

கௌரவ சுஜீவ சேனசிங்க

கௌரவ மாவை சோ. சேனாதிராசா

கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன

கௌரவ சத்துர சந்தீப சேனாரத்ன

கௌரவ விஜித் விஜயமுணி சொய்சா

கௌரவ டி.எம். சுவாமிநாதன்

கௌரவ ரஊப் ஹகீம்

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி

கௌரவ அப்துல் ஹலீம்

கௌரவ டீ. பி. ஹேரத்

கௌரவ மனோஜ் ஹேவாகம்பலகே

கௌரவ ஏ. எச். எம். பௌஸி

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. *பத்திரங்கள் சமர்ப்பித்தல்*:** (1) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் -

(i) 2013 ஆம் நிதி ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் மூன்றாவது தொகுதியின் XI ஆம் பகுதியையும்;

(ii) 2016 ஆம் நிதி ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் ஒன்பதாவது தொகுதியின் XVI ஆம் பகுதியையும்;

(iii) 2017 ஆம் நிதி ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XXV ஆம் பகுதியையும், மூன்றாவது தொகுதியின் XI ஆம் பகுதியையும், ஒன்பதாவது தொகுதியின் XII, XIII, XIV மற்றும் XV ஆம் பகுதிகளையும்;

(iv) 2018 ஆம் நிதி ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XXIII மற்றும் XXIV ஆம் பகுதிகளையும் மூன்றாவது தொகுதியின் XII ஆம் பகுதியையும், ஒன்பதாவது தொகுதியின் X, XI மற்றும் XII ஆம் பகுதிகளையும்; மற்றும்

(v) 2020 ஆம் நிதி ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் எட்டாவது தொகுதியின் II ஆம் பகுதியையும் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனவும் ***அச்சிடப்பட*** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர், மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் (105 ஆம் அத்தியாயமான) 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 19(உ) பிரிவின் கீழ், சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 சனவரி 26 ஆம் திகதிய 2055/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் அவ்வொழுங்குவிதிகளை திருத்தும் பொருட்டு சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 திசெம்பர் 26 ஆம் திகதிய 2155/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளைச் சமர்ப்பித்து அவ்வொழுங்குவிதிகள், சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் ஆண்டறிக்கையைக் சமர்ப்பித்து அவ்வறிக்கையை, கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2019.06.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரின் மூன்றாவது அறிக்கையில் மத்திய மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களின் 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை, அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர், 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான பனை அபிவிருத்தி சபையின் ஆண்டறிக்கைகளைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை, உற்பத்திகளும் சேவைகளும் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**2. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்**: (1) அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ எம்.ஏ. சுமந்திரன் சார்பாக அக்குழுவின் உறுப்பினர் கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டமூலம்;

(ii) பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம்;

(iii) துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தச்) சட்டமூலம்;

(iv) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம்; மற்றும்

(v) வருடாந்த மதிப்பீடுகள் பற்றிய அறிமுகக் குறிப்பில் காட்டப்பட்டுள்ள தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் கீழ் குறைநிரப்பு உதவிச் சேவைகள் மற்றும் அவசர தேவைப் பொறுப்புக்களின் மூலம் வழங்கப்பட்டுள்ள மேலதிக ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பு

ஆகியன பற்றிய அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ மயில்வாகனம் திலகராஜா அக்குழுவினால் தொகுக்கப்பட்ட, “தோட்ட மருத்துவ அலகுகளை அரசாங்கம் சுவீகரித்தல்” தொடர்பிலான அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) உற்பத்திகளும் சேவைகளும் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட—

(i) 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள்;

(ii) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான ஆரம்பக் கைத்தொழில் அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள்;

(iii) 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஆண்டறிக்கைகள்;

(iv) 2016 ஆம் ஆண்டுக்கான தேசிய வடிவமைப்பு நிலையத்தின் ஆண்டறிக்கையும் கணக்குக் கூற்றும்;

(v) 2014 ஆம் ஆண்டுக்கான தேசிய கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை;

(vi) 2016/2017 ஆம் ஆண்டுக்கான கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்டின் ஆண்டறிக்கை;

(vii) 2015 ஆம் ஆண்டுக்கான ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள்;

(viii) 2018 ஆம் ஆண்டுக்கான கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் நீண்டகாலமாக இடம் பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை;

(ix) 2018 ஆம் ஆண்டிற்கான புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(x) 2013/2014 மற்றும் 2014/2015 ஆம் ஆண்டுகளுக்கான மாந்தை சோல்ட் லிமிற்றெற்றின் ஆண்டறிக்கையும் கணக்குகளும்

பற்றிய அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(4) உற்பத்திகளும் சேவைகளும் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா அக்குழுவினால் தொகுக்கப்பட்ட, "புல்மோட்டை கடலில் மூழ்கிய 'MV CORDIALITY ' எனும் சரக்கு கப்பலில் இருந்த இல்மனைட்டின் உரிமம் தொடர்பான சர்ச்சை" தொடர்பிலான அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(5) தேசியப் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ மலித் ஜயதிலக குழுவினால் தொகுக்கப்பட்ட, "இனங்கள் மற்றும் மதங்களுக்கிடையிலான நட்புறவை கட்டியெழுப்பியவாறு புதிய பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதத்தை வேரோடு களைத்தெறிவதற்கு தேவையானவகையில் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான சட்டதிட்டங்களை தயார் செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் பற்றிய பிரேரணை" தொடர்பிலான அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(6) கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம் 20(4) (ஆ) ஆம் பிரிவின் கீழான கட்டளைகள்;

(ii) 2018 ஆம் ஆண்டுக்கான கட்புல மற்றும் அழகியற்கலைகள் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை;

(iii) 2017 ஆம் ஆண்டுக்கான தேசிய கல்வி ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை;

(iv) 2017 ஆம் ஆண்டுக்கான இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும்;

(v) 2017 ஆம் ஆண்டுக்கான பேராதனை பல்கலைக்கழகத்தின் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளுக்கான பட்ட மேற்படிப்பு நிறுவகத்தின் ஆண்டறிக்கை;

(vi) 2017 ஆம் ஆண்டுக்கான களனி பல்கலைக்கழகத்தின் கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் ஆண்டறிக்கை;

(vii) 2018 ஆம் ஆண்டுக்கான மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழில் நுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கையும் வருடாந்த கணக்கறிக்கையும்;

(viii) 2018 ஆம் ஆண்டுக்கான கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை;

(ix) 2017 ஆம் ஆண்டுக்கான ஶ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை;

(x) 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை;

(xi) 2017 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முப்பத்தொன்பதாவது ஆண்டறிக்கை;

(xii) 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான பேராதனை பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கைகள்;

(xiii) 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை களனி பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும்;

(xiv) 2014 ஆம் ஆண்டுக்கான இலங்கை அச்சக நிறுவகத்தின் ஆண்டறிக்கை;

(xv) 2017 ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை;

(xvi) 2017 ஆம் ஆண்டுக்கான கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை;

(xvii) 2016 ஆம் ஆண்டுக்கான மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை;

(xviii) 2018 ஆம் ஆண்டுக்கான கொழும்பு பல்கலைக்கழகத்தின் உள்நாட்டு மருத்துவக் கல்வி நிறுவகத்தின் ஆண்டறிக்கை;

(xix) 2018 ஆம் ஆண்டுக்கான பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாயப் பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் ஆண்டறிக்கை;

(xx) 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஆங்கில பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்;

(xxi) 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும்;

(xxii) 2018 ஆம் ஆண்டுக்கான மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்தில் உயர் கல்விக்கான தேசிய நிலையத்தின் ஆண்டறிக்கை;

(xxiii) 2018 ஆம் ஆண்டுக்கான ஶ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் ஆண்டறிக்கை;

(xxiv) 2018 ஆம் ஆண்டுக்கான கொழும்பு பல்கலைக்கழக, மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் ஆண்டறிக்கை மற்றும் வருடாந்த கணக்குக் கூற்றுகள்;

(xxv) 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும்;

(xxvi) 2018 ஆம் ஆண்டுக்கான மருத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை;

(xxvii) 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் ஆண்டறிக்கை; மற்றும்

(xxviii) 2017 ஆம் ஆண்டுக்கான களனிப் பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் ஆண்டறிக்கை ஆகியன தொடர்பிலான அறிக்கை

ஆகியன தொடர்பிலான அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(7) கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க அக்குழுவினால் தொகுக்கப்பட்ட, “தொழில்துறைசார் தகவல் கணினி பட்டப்படிப்புகளை இலங்கை அரச மற்றும் அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களுக்கு அறிமுகப்படுத்துதல்” தொடர்பிலான அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**3. பாராளுமன்ற அமர்வுகள் ( இல.1 ) :** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 2.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**4. பாராளுமன்ற அமர்வுகள் ( இல..2 ) :** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2020 பெப்ரவரி 20 ஆம் திகதி, வியாழக்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 7.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 12.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 7.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**5. இலங்கை சுற்றாடலியல் தொழில் வல்லுநர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் :** பரிசீலனைக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

சட்டமூலமானது சட்டவாக்க நிலையியற் குழுவினால் திருத்தப்பட்டவாறு பரிசீலிக்கப்பட்டது.

“சட்டவாக்க நிலையியற் குழுவின் திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” என வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாம் முறை மதிப்பிடப்படுமாக” என வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாம் முறை மதிப்பிடப்படு நிறைவேற்றப்பட்டது.

**6. ஒத்திவைப்பு (பிணைமுறி விநியோகம் பற்றிய தடயவியல் கணக்காய்வறிக்கைகள்) :** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்ற சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை மீண்டும் எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

(பி.ப 2.50 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ க. துரைரெட்ணசிங்கம் தலைமை தாங்குவாராக" என கௌரவ டீ. பி. ஹேரத் முன்மொழிய அதனை கௌரவ உதய பிரபாத் கம்மன்பில வழிமொழிந்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப 3.35 மணிக்கு கௌரவ க. துரைரெட்ணசிங்கம் தலைமை தாங்கினார்.)

"கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம தலைமை தாங்குவாராக" என அரச முகாமைத்துவ மற்றும் கணக்கீட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப 4.52 மணிக்கு கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம தலைமை தாங்கினார்.)

"கௌரவ மயந்த திசாநாயக்க தலைமை தாங்குவாராக" என உள்ளக வர்த்தக மற்றும் பாவனையாளர் நலனோம்புகை இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப 6.12 மணிக்கு கௌரவ மயந்த திசாநாயக்க தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அப்போது நேரம் பி.ப. 6.30 மணியாகிவிடவே தலைமைதாங்கும் உறுப்பினர் வினாவின்றிப் பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், அதன் இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க, 2020 பெப்ரவரி 20 ஆம் திகதி வியாழக்கிழமை மு. ப. 9.30 வரை ஒத்திவைக்கப்பட்டது.